# சந்மார்க்க போதினி.

(மூன்றாம் பாகம்.)

ஆரம்ப வித்தியாசாலை
ஐந்தாவது வகுப்புக்கு ஏற்றது.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர்

வித்தியாநுபாலன அச்சகம்
சென்னை.

விலை அணா 2. 15 பை /25

371.32
CAN
PB

# சந்மார்க்க போதினி.

371.32 CAN
AR PB

(மூன்றாம் பாகம்.)

ரகுநாதன் பதிப்பகம்
புத்தக வியாபாரம்
305, காலி வீதி,
கொழும்பு-6.
தொலைபேசி: 26946

ஆரம்ப வித்தியாசாலை
ஐந்தாவது வகுப்புக்கு ஏற்றது.

ARCHIVES

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்
வித்தியாநுபாலனயந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

1953.

விலை அணா 2.

# முன்னுரை.

அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்
டாக்டர். அ. சிதம்பரநாதச்செட்டியார். எம்., ஏ.
எழுதியது.

"சந்மார்க்கபோதினி" என்ற தலைப்பில், திருவாளர். G. சுப்பிரமணியம் அவர்கள் தொகுத்து, அவரால் பாதுகாக்கப்பட்டு வரும் ஆறுமுகநாவலர் அச்சகத்தின் ஆதரவில் வெளியிட்டிருக்கும் புத்தகத்தைக் கண்டேன். அதனுள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நாலடியார், நீதிநெறிவிளக்கம், திரிகடுகம் முதலிய நீதிநூல்களிலிருந்து பல பகுதிகள் தொகுக்கப்பட்டுப் பொருளுடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அன்றியும் வேறு சில நீதிநூல்களின் கருத்துக்களும் திரட்டித் தரப்பட்டுள.

ஆறுமுகநாவலரவர்களுடைய பால பாடங்களின் காணப்பட்ட கருத்துக்கள் சிலவும் இத்தொகுதியின்கண் இடம் பெற்றுள.

மக்களை அறவழியிற் செல்லுமாறு அடிக்கடி பணித்து வருதல் தக்கது என நம் ஆன்றோர் கருதினர். அதனால், சிறு வயது முதலே அறம் இன்னதென்று கூறியும் அதன் வழி ஒழுகுக என வற்புறுத்தியும் வந்தனர்.

கல்வியினால் ஆய பயன்களில் தலை சிறந்ததாக மதிக்கத் தக்கது பிறர்க்குத் தீமையின்றி நாம் எப்படி வாழலாம் எனக் கற்றுக்கொள்வது. சமுதாய நலத்தில் எவ்வாறு ஒவ்வொரு தனிப்பட்ட மகனும் மகளும் பங்கு பற்றவேண்டும் என்பதும், அந்நலத்திற்குக் கேடின்றித் தனது நலத்தை எங்ஙனம் அமைத்துக்கொள்ளவேண்டும் என்பதும் ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ளவேண்டிய பாடம். இப் பாடத்தைக் கற்றுக் கொள்ளாமல் சில பாடல்களை மனப்பாடம் பண்ணிவிடுவதாலோ சில கணக்குக்களைப் போடுவதற்கு கற்றுக்கொண்டு

விடுவதாலோ பெரும்பயன் விளையாது. கல்வியினுடைய நோக்கமே மக்களை மாக்களாக இன்றி மக்களாக வாழும்படி தூண்டுதல் என்பது. மக்கட் பண்பு அமையாதவரைக் கற்றூர் எனச் சிறப்பித்துச் சொல்லுதல் பொருந்தாது. மக்கட்பண்பு அமையப் பெற்றவரே, நல்லொழுக்கம் கைவந்தவரே நன்கு கற்றூர் எனச் சொல்லத்தக்கவர்.

அதனுல், பள்ளிக்கூடங்களில் அறவழிக் கல்வி இன்றியமையாதது என்பது புலனுகும்.

இக்கல்வி ஒரு சமயச் சார்பின்றிப் பொதுவாக, எல்லாச் சமயத்தார்க்கும் ஒத்ததாய் அளிக்கப்படவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் நோக்கம். பல நாடுகளிலும் பல காலங்களிலும் வாழ்ந்து பெருமையடைந்த ஒழுக்கச் சீலர்களுடைய வரலாறுகளை இனிய முறையிலே, மாணவர் உள்ளத்தைக் கவரக்கூடிய வகையிலே, எடுத்து இயம்புதல் வழியாக மாணவரை நல்வழிப் படுத்துதல் இயலும். இதுவே இக்காலத்திற்கு ஏற்ற முறையென மதிக்கப்படுகிறது. என்றுலும், இவ்வாறு உள்ளத்தை உருக்க வல்ல வகையில் எடுத்து உரைக்கும் ஆற்றல் படைத்தவர் சிலரேயுண்டு. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஒவ்வொரு வகுப்பிலும் அத்தகையார் உளரோ என்பது சிந்தித்தற்கு உரியது.

கதை வழியாகவும் வரலாறு வழியாகவும் அறவழி நிற்க என மாணவர்க்கு உணர்த்த முடியாது போயின், இது போன்ற புத்தகங்கள் நேரே அறவழியிற் செல்க எனப் பணிக்கின்ற வகையான் வற்புறுத்தும் ஆற்றல் உடையன எனக் காணலாம். பல நேரங்களில் வயது முதிர்ந்த நிலையிலும் ஒருவர் பிள்ளைப் பருவத்தே மனப்பாடம் பண்ணிய செய்யுட் கருத்துக்கள் நினைவிற்கு வந்து ஒருவரை நல்வழியில் நிறுத்துதல் உண்டு. அக்காரணத்தால், இது போன்ற புத்தகங்கள் மாணவ உலகிற்காக வரவேற்கத் தக்கன.

அண்ணுமலை நகர்<br>15-12-53.

அ. சிதம்பரநாதன்.

# முகவுரை.

கல்வியால் மனிதர் பூரண பலனை அடைவதானால் அக்கல்வி ஈசுர ஞானத்தையும் பத்தியையும் பிறப்பிக்கவும் வளர்க்கவும் தக்கதாக அமைக்கப்பட வேண்டுமென்பது உலகெங்கும் பெரும்பான்மை கற்றோருடைய அபிப்பிராயமாகத் திகழ்கின்றது. ஒரே சமய உணர்ச்சியுள்ள மாணவர் ஒருங்கு சேர்ந்து கற்கும் வித்தியாசாலைகளிலே சமயக் கல்வியை விரும்பியவண்ணம் அமைப்பது இலகு. ஆயினும் இந்நாட்டிலே பல்வேறு சமயத்தினராகிய மாணவர் கற்கும் வித்தியாசாலைகளிலே ஒவ்வொரு சமயத்தவர்க்கும் அவரவருக்கேற்ற சமயக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்வது இலகுவன்று. ஆதலினால் சமயக் கல்வியை ஊட்ட இயலாத நிலையில், எல்லாச் சமயத்தவரும் அங்கீகரிக்கக்கூடிய சன்மார்க்க போதனைக் கல்வியையாயினும் இவ்வித்தியாசாலைகளில் ஊட்டுதல் பொதுவாய், சமூகவாழ்க்கைக்கு ஓரளவிற்கு நற்பயனை அளிக்குமென்ற அபிப்பிராயத்தைப் பெரியோர் ஏற்றுக்கொள்ளுவார்களென நம்புகிறேன். தமிழிலே நீதிநூல்கள் மலிந்து பொலிந்திருந்தபோதிலும், தற்கால அரசினர் கல்வித்திட்ட முறைக்கேற்ப, மாணவருடைய வயதுக்கும் வகுப்புக்கும் அறிவுத்தகைமைக்கும் ஏற்றவாறு அவைகள் வகுக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலினால் நீதிநூல்திரளில் சிலவற்றை ஆராய்ந்து, சாதி, சமய, தருக்க சம்பந்தமான பாகங்களை விலக்கி வகுப்பு வளர்ச்சிக்கு ஏற்றவாறு தேர்ந்து வகுப்புமுறையில் தொகுத்துப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

ஆராயப்பட்ட நூல்களாவன:—ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல ரவர்களால் செய்யப்பட்ட பாலபாடம் இரண்டாம் புத்தகமும், அவராலே உரை செய்யப்பட்ட ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, முதலிய நூல்களிலமைக்கப்பட்டிருக்குந் தாற்பரியங்களும், இன்னும் நாலடியார், நீதிவெண்பா, நீதிநெறிவிளக்கம், திரிகடுகம், நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம், திருக்குறள் முதலிய நூல்களில் சில பாகங்களுமாம். இவைகளைச் சேர்க்கவும் தொகுக்கவும் இவ்வித்தியாசாலையில் கடமையாற்றும் சில தமிழ்ப்பண்டிதர் செய்த உதவிக்கு நன்கு நன்றி பாராட்டுகின்றேன்.

இப்பிரசுரங்கள் ஒவ்வொரு வகுப்புக்குத் தேவையான அளவில் தனிப்பாகங்களாகவும் எல்லாப் பாகங்களுஞ் சேர்த்துக் கட்டப்பட்ட ஒரே புத்தகமாகவும் இவ்வித்தியாசாலையிலும், சென்னை தங்கசாலைவீதி 300-நெம்பர், புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தனிப் பாகம் விலை அணா 2. முழுத்தொகுதி ரூபாய் ஒன்று.

சிதம்பரம்.<br>நாவலர் சைவப்பிரகாச<br>வித்தியாசாலை.<br>நந்தன௵ சித்திரைமீ.

G. சுப்பிரமணியம்.<br>தருமபரிபாலகர்.

# சந்மார்க்க போதினி.

## மூன்றாம் பாகம்.

சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்குமுன் நித்திரையை விட்டு எழுந்து தந்தசுத்தி செய்து கடவுளை வணங்கிக்கொண்டு உன் பாடங்களைக் கற்பாயானால் அவைகள் உன் மனசிலே நன்றாகப் பதியும்.

தந்தைசொன் மிக்க மந்திர மில்லை.

தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை.

தோழ னோடும் ஏழமை பேசேல்.

தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.

நோன்பு என்பது கொன்று தின்னாமை.

புலையுங் கொலையுங் களவுந் தவிர்.

மருந்தே யாயினும் விருந்தோடு உண்.

மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்.

வையந் தோறும் தெய்வம் தொழு.

மன்று பறித் துண்ணேல்.

வஞ்சகம் பேசேல்.

கெடுப்பது ஒழி.

கொள்ளை விரும்பேல்.

சூது விரும்பேல்.

செய்வன திருந்தச் செய்.

தேசத்தோடு ஒத்து வாழ்.

நேர்பட ஒழுகு.

பூமி திருத்தி உண்.

மூர்க்கரோடு இணங்கேல்.

ஓரஞ் சொல்லேல்.

இன்றைக்குச் செய்யக்கூடியவற்றை நாளைக் கென்று பின்போடாதே.

அடையத்தகும் நன்மையாகிய இடத்தைத் தெரிந்து, நீ அடை.

பெரியோர் உன்னைச் சீ என்று அருவருக்கும்படி, நீ துட்டனாய்த் திரியாதே.

நீ பிறரோடு பேசும் சொற்களிலே மறதி படப் பேசாதே.

நீ செய்யவேண்டும் முயற்சியைச் செய்யாமல் சோம்பல் கொண்டு வீணாகத் திரியாதே.

உன்னைப்பெரியோர்கள் யோக்கியன் என்று புகழும்படி, நீ திரி.

சற்பாத்திரங்களிலே தானம் செய்தலை, நீ விரும்பு.

பாவச் செயல்களை, நீ செய்யாமல் நீக்கு.

தொழில் செய்யும்பொழுது முயற்சியினாலே வரும் சரீரப்பிரயாசத்தால் ஆகிய துன்பத்துக்கு, நீ சிறிதாயினும் இடம் கொடாதே.

முடிக்கும் உபாயத்தை ஆராய்ந்து அதன் பின்பு செய்ய விரும்புந் தொழிலை ஆரம்பி.

கடவுளை, நீ மறந்தாயினும் இகழாதே.

நீ வசிக்கும் தேசத்தில் உள்ளவர்களுடனே, பகையில்லாமல் ஒத்து வாழ்.

பழமையாகிய சிநேகத்தை, மறந்து விடாதே.

தோல்வியடையக்கூடிய வழக்குக்களிலே, சம்பந்தப் படாதே.

புண்ணியத்தையே, நீ விடாமல் உறுதியாகப் பிடி.

உன் நாட்டிலுள்ளோர் பலரும் ஒத்துக் கொள்ளத்தக்க நல்ல காரியங்களையே செய்.

நீ நிற்கின்ற உயர்ந்த நிலையிலே நின்று ஒருபோதும் நீங்காதே.

ஆழமுள்ள நீரிலே, நீந்தி விளையாடாதே.

நோயைத் தருகிற சிற்றுண்டிகளை, உண்ணாதே.

அறிவை வளர்க்கிற நூல்கள் பலவற்றையும், கற்றுக்கொள்.

நெல்லுப்பயிரை, வேண்டிய முயற்சிசெய்து விளைவி.

உன் ஒழுக்கம் கோணுமல் செவ்வைபட, நட.

பிறர் கெடத்தக்க தீவினைகளை, ஒருபோதும் சாராதே.

பயன் இல்லாத அற்ப வார்த்தைகளை, ஒரு போதும் பேசாதே.

வியாதிகளுக்கு அவபத்தியம் முதலானவை களைச் செய்து இடங்கொடாதே.

அறிவுடையவர்களாலே பழிக்கப்படுவன வாகிய இழிச் சொற்களை, நீ பேசாதே.

பால் கொடுத்தவருக்கும் விஷத்தைக் கொடுக்கிற பாம்பைப்போல்பவர்களுடனே, நீ சகவாசஞ் செய்யாதே.

வழுக்கள் உண்டாகும்படி, ஒன்றையும் பேசாதே.

பெருமையைப் பெறும்படியாக, நல்ல வழி யிலே நில்.

உன்னைத் துதிசெய்து அடுத்தவரை கை விடாமற் காப்பாற்றி, வாழ்.

உன் விளைநிலத்தை சீர்திருத்திப் பயிர் செய்து, உண்.

அறிவிலே சிறந்த பெரியோரை உனக்குத் துணையாகப் பேணிக்கொள்.

பிறவிக்குக் காரணமாகிய அஞ்ஞானத்தை, மெய்ஞ்ஞானத்தினலே போக்கு.

திரவியத்தை மேன்மேலும் உயரும்படி காத்து, வாழ்.

மனசை யாதொரு விஷயத்திலும் கலங்க விடாதே.

பகைவன் உன்னை நெருக்கிப் பின் வருத்தும்படியாக நீ இடம் கொடாதே.

சுருங்கச்சொல்லி விளங்கவை.

அதிக போசனத்துக்கு ஆசைப்படாதே.

சண்டை முகத்திலே போய் நில்லாதே.

அறிவில்லாதவர்களுடனே, சிநேகம் பண்ணுதே.

மேன்மையாகிய மனிதருடைய சொல்லை, கேட்டு நட.

சொல்லப்படும்பொருளை சந்தேகம் நீங்கும் படி, சொல்லு.

நிலையாத பொருள்களின் மேலதாகிய ஆசையை வெறுத்து விலக்கு.

உன்னுடைய சாமர்த்தியத்தை, புகழ்ந்து பேசாதே.

வாதுகளை பெரியோர் முன்னே, பேசாதே.

கல்விப்பொருளையே நீ விரும்பு.

மோக்ஷத்தை அடையும்படி அதற்குரிய ஞானவழியிலே நில்.

நற்குண நற்செய்கைகளிலே எல்லோரினும் மேலானவனாகி, இரு.

கத்தி வெட்டைப்போல ஒருவரோடுங் கடினமாகப் பேசாதே.

யாதொரு பிரயோசனத்தை விரும்பியும் தீவினையை, நீ ஒருவருக்கும் செய்யாதே.

பகைவர்களை ஒருபோதும் நம்பாதே.

பக்ஷபாதத்தை, யாதொரு வழக்கிலும் பேசாதே.

அற்ப காரியமானாலும் அசட்டையில்லாமல் செய்யவேண்டும். "சிறு துரும்பும் பல்லுக்குத்த வுதவும்"

நல்லது செய்து நடுவழியே போகவேண்டும், நற்செய்கையே நேரான வழி. நல்வினை செய்வது ஊரார் வாழ்த்துவதற்கென்று நினைக்கலாகாது.

செய்ய வேண்டிய கடமையைத் தவறாமல் செய்; கொடுக்கவேண்டிய கடனைத் தவறாமல் கொடு; வறுமை வந்தாலும் கடமையைக் கைவிடாதே. கடனை இறுக்காமல் விட நினையாதே.

நல்லவனாயிருந்து நன்மை செய்யவேண்டும். "நன்மை கடைப்பிடி"

எல்லாரையும் நம்பி நடவாதே; எல்லாரும் நம்ப நட.

ஈவிரக்கமின்றி முரடனாயிருக்கவேண்டாம்; "வந்தனம்", "வணக்கம்", "தயை கூர்ந்து" என்கின்ற சொற்களை அடிக்கடி சொல்ல ஒருபோதும் மறக்காதே—அது வாதம், சண்டை, சச்சரவைத் தடுக்கும்.

கடவுள்தான் நமக்கு அடைக்கலம். அவர் சர்வ வல்லமை உள்ளவர். அவர்தான் உலகத்துக்கு எசமான். அவராலேதான் எல்லா உலகங்களும் நடைபெறுகின்றன. அவருடைய ஆஞ்ஞையால்தான் நாங்கள் இயங்குகின்றோம். மனிதர் போடுந் திட்டங்களை அவர் நடப்பிப்பார் அல்லது மாற்றி விடுவார். கடவுள் சித்தத்தை எந்த மனித ஸ்தாபனமும் இதுவரை தடுத்திருப்பதாகத் தெரியவில்லை; தடுக்க முடியாது.

சத்தியத்தையும் அன்பையும் பொறுமையையுங் கடைப்பிடித்து ஒழுகுபவனுக்கு கடவுள் அருள் தவறாது கிடைக்கும். அருள், கண்ணால் காணக்கூடிய வஸ்துவல்ல. அருள் பெற்றவன் மனதில் உணர்ச்சியும் வாழ்க்கையில் குறிகளும் தோன்றும்.

ஆண்களை விடப் பெண்களுக்குத்தான் அன்புஞ் சகிப்புத்தன்மையும் அதிகம்.

பெண்ணின் நிலே உயரும்போது ஆடவ ரின் நிலேயும் உயரும்; இவ்விருவரின் நிலே உயரும்போது மனித சமூகத்தின் நிலே உயரும்.

பெண்களுக்கு ஆடையிலும் ஆபரணங் களிலும் அழகு காண முடியாது. சேவை செய் வதில்தான் அழகு பரிணமிக்கிறது.

பொன் உடைமையிலும் கற்புடைமையே சிறந்த ஆபரணம்.

சீதையைப்போல் பரிசுத்தமும் சத்தியமும் உடைய பெண்களிடம் யாரும் சத்தியம் தவறி அணுக முடியாது. ஆனல் அத்தகைய சீதை களே இக்காலத்தில் காண்பது அரிது. எல்லாப் பெண்களுமே அந்நிலே அடைய முயலல் வேண்டும்.

கடமை செய்யாமல் உரிமையைப் பெற விரும்புவது அநீதியாகும்.

எவ்வளவு பெரிய மனிதராளுலும் சிறிய மனிதராளுலுஞ் சரி, தனது கடமையைக் கை விடலாகாதெனக் கீதை கூறுகிறது.

கடமைக்காக எவ்வளவு தியாகமுஞ் செய்ய ஒவ்வொரு மதத்தினருங் கற்றுக் கொள்ள வேண்டியது—அன்போடு தேசத்துக்குப் பணி செய்வதே அந்தக் கடமை.

தாய் தந்தையர் இருக்கும்போது அவரை இகழ்ந்து நடப்பதும், அவர் இறந்தபோது

உலகோர் மெச்சும்படி துன்பப்படுவதும் ஆடம்பர வேடிக்கைகளைச் செய்வதும் மூடர் செய்கை.

பெண்டிரும், உண்டியும், பொருளும் காப்பாற்று முறையில் காப்பாற்ருவிட்டால் கெட்டுப்போம்.

ஏவிய சொற்கேளா மக்களும் வீட்டுப் பொருளை வீணே அழிக்கின்ற மனைவியும் இம்மையில் எவர்க்கும் பயனற்றவை.

தனக்கு உதவியற்றவரைச் சேர்தலும் சினமுற்ற காலத்தில் பயனற்ற மொழிகளைப் பேசுதலும், தன்னிடத்துத் தொழில் செய்பவனோடு பொறுமை பாராட்டாமல் வேற்றுமைப்படுதலும் துன்பத்தை விளைவிக்கும்.

தலைமயிர், முகம், பல், கழுத்து, மார்பு இவை யழகினும் உள்ளத்தூய்மையே மேலான அழகாகும்.

அறமுள்ளவனுக்கு அருள் விளையும்; அருள் உள்ளவன் பழியையுந் தீவினையையும் புறங் கூறுதலையுஞ் செய்ய மாட்டான்.

தன் குலச்சிறப்புக் கெடாதவண்ணம் ஒழுகுதலும், குணஞ் சான்றவர்க்கு ஆவன செய்தலும், உயிர்களுக்கு அகிதஞ் செய்யாமலிருப்பதும் மேலோர் செய்கை.

உயர்ந்த குடிப்பிறப்பு சிறந்த கல்வி கூர்ந்த விவேகம், வெற்றி மிகுந்த வீரம் இவற்றையுடையவர் அவற்றைத் தாமே எடுத்துரைக்கலாகாது.

இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்குமென்பது நன்கு விளங்காமையான் நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்.

கடவுள் பத்தியும், நல்லொழுக்கமும் உடைய பிதா மாதாக்களை உடைமையே பெரும் பாக்கியம்.

தீவிரமாயேனும் மந்தமாயேனும் நல்வினை இன்பத்தையும் தீவினை துன்பத்தையும் வருவிக்கும்.

சோம்பலே தீமைக்கும் துன்பத்திற்கும் பிறப்பிடம்.

அடக்கம் உடைமை பாலியர்களுக்குச் சிறந்த ஆபரணம்.

உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவற்ற செல்வம்.

கடன்படும் செல்வர்களிலும் கடன்படா வறியவர்களே மிகுந்த சுகம் உடையவர்கள்.

நம்மேல் அன்பில்லாதவர்கள் மேலும் நாம் அன்புள்ளவர்களாயே இருத்தல் வேண்டும்.

அதிக வருத்தத்தோடு உன்னைப் பெற்று வளர்த்த பிதா மாதாக்களை நீ என்ன வருத்தப் படினும் மறந்தும் கைவிடாமல் அன்போடு காப்பாற்று.

தமையன் மனைவி, குருபத்தினி ஆகிய இவர்களைத் தம்மைப்பெற்ற தாயார்களாக மதித்தல் வேண்டும்.

பிதா மாதாக்கள் பெண்ணுக்குச் சிறுபிராயத்திலே கடவுளுடைய குணமகிமைகளையும் கடவுளை வழிபடுமுறையையும் புண்ணியபாவங்களையும் கணவனுககுச் சேவை செய்யும் முறைமையையும் கற்பித்து வீட்டு வேலைகளைப் பழக்கல் வேண்டும்.

பெண்களுக்கு உரிய தருமங்கள் எல்லாவற்றுள்ளும் முக்கிய தருமம் பதிவிரதம் "குலமகட்கழகுதன் கொழுநனைப் பேணுதல்" என்றார் பெரியோர்.

சூரியோதயத்துக்கு முன்னே நித்திரை விட்டெழுதல், கடவுளைத் தியானித்துத் துதித்தல், வீடு விளக்கஞ் செய்தல், பாத்திரசுத்தி செய்தல், கணவனுடைய பணிவிடையைச் செய்தல் இவை முதலியன வெல்லாம் மங்கல வாழ்க்கையையும் செல்வத்தையும் விரும்பிய நன்மனைவியின் செய்கைகளாம்.

தகாத வார்த்தை பேசல், பலகணி வழியாகப் பார்த்தல். எல்லாருடனுஞ் சிரித்தல், பகலிலே நித்திரை செய்தல், ஆஞ்ஞையில்லாமல் அயலாரோடு வெளியே போதல், தம்மை அழகுபெற அலங்கரித்துக் கொண்டு தலைக்கடையில் நிற்றல், கூத்து சினிமாபடம் பார்க்க விரும்புதல், கணைக்காலுந் தனமுந் தெரிய ஆடை உடுத்தல், முதிர்ந்த வயசுடையவர் இல்லாத இடத்திற்குப் போதல், கூட்டத்தினுள்ளே புன்னகை செய்தல். விவாகமாகாதவர்களுடன் கூடி வேடிக்கை பார்க்கப்போதல்.

தான் விருப்பிய இடத்திலே தங்குதல். இவை யெல்லாம் ஒழுக்கங் கெடுதற்கு ஏதுவாம்.

மனைவி கற்புநிலை தவறினவளானால் குலங் கெடும், அதனால் எல்லாப் பயனுங் கெடும், ஆகையால் பெண்ணானவள் சத்தியந் தவறாமல் இருக்கும்படி காத்தல் வேண்டும். பெண்கள் தங்களைத் தாங்களே காத்தல் வேண்டும்.

விவேகமில்லாத சில பெண்கள், செல்வர் வீட்டுப் பெண்கள் தரித்திருக்கின்ற ஆடை ஆபரணங்களைப்போல் தங்களுக்கும் வாங்கித் தரும்பொருட்டுத் தங்கள் கணவர்களை வருத்து கிறார்களே; கடன்பட்டாயினும் வாங்கிக் கொடுத்தாலொழியத் திருப்தி அடையார்கள்; வாங்கிக் கொடாதபொழுது கணவர்களை அவ மதிக்கின்றார்கள். விவேகமுள்ள பெண்கள் தங்கள் கணவர்களுடைய பொருள் வருவாய்க் கேற்ப வாங்கிக் கொடுப்பவைகளைப் பெற்றுக் கொண்டு செய்ந்நன்றி காட்டித் திருப்தியடை வார்கள். குலஸ்திரீ தன் கணவனுடைய பொருள் வரவுக்குமேலே செலவு செய்யச் சம்மதிக்கமாட்டாள். கணவன் கடன்பட்டு இம்சைப்பட மனம்பொறுத்து இருக்கமாட் டாள்.

ARCHIVES

# பிரகடன் பத்திரம்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| முதற்பாலபாடம் | 0 | 3 | 0 |
| இரண்டாம்பாலபாடம் | 0 | 5 | 0 |
| மூன்றாம்பாலபாடம் | 0 | 10 | 0 |
| நான்காம்பாலபாடம் | 1 | 4 | 0 |
| நான்காம்பாலபாடம் குறிப்புரையும் அப்பியாச வினாக்களும் | 1 | 12 | 0 |
| முதற்சைவவினாவிடை | 0 | 3 | 0 |
| இரண்டாஞ்சைவவினாவிடை | 0 | 10 | 0 |
| திருக்குறள் மூலம் | 0 | 8 | 0 |
| திருவள்ளுவர் பரிமேலழகருரை | 5 | 0 | 0 |
| நன்னூல் மூலம் | 0 | 3 | 0 |
| நன்னூல் விருத்தியுரை | 3 | 8 | 0 |
| நன்னூற்காண்டிகையுரை | 3 | 8 | 0 |
| இலக்கணச்சுருக்கம் | 1 | 0 | 0 |
| இலக்கணவினாவிடை | 0 | 3 | 0 |
| இலக்கணக்கொத்துரை தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கணவிளக்கச் சூறாவளி | 1 | 8 | 0 |
| தொல்காப்பியம் சேனாவரையம் | 3 | 0 | 0 |
| பெரியபுராண வசனம் | 2 | 8 | 0 |
| சிதம்பரமான்மியம் | 0 | 3 | 0 |
| சிவஞானபோதம் சிவஞானமுனிவர் சிற்றுரை | 1 | 4 | 0 |
| திருக்கோவையாருரை | 3 | 0 | 0 |
| ஆறுமுகநாவலர் சரித்திரம் | 1 | 4 | 0 |

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்,

வித்தியாநுபாலனயந்திரசாலை,

நெ. 300, தங்கசாலை வீதி, சென்னை.